# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt

***Mobile: 0449 892 066***

***Email :mtdruitttsc@gmail.com*** ***Web : www.mtsc.org.au***

# ஆண்டு 5 – பேச்சுப் போட்டி 2020

பேச்சுப் போட்டி எதிர்வரும் **30.05.2020** அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.



நடுவர்களுக்கும், சபையோருக்கும் எனது அன்பான வணக்கம் !

## தன்னம்பிக்கை

எமது வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் ஓர் ஒளிவிளக்கே “தன்னம்பிக்கை”. தன்னம்பிக்கை என்றால் தம்மால் இதைச் செய்யமுடியும் என நம்புவதே ஆகும்.

தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வது எப்படி? முதலில் ஒரு இலக்கைத் தெரிவு செய்ய வேண்டும். பின்னர் விடாமுயற்சியுடன் செயலாற்ற வேண்டும். இடையில் வரும் தடைகளைக் கண்டு சோர்வடையக் கூடாது. அத்துடன் எமது ஆற்றலுக்கேற்ப திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இளங்கோவடிகள், வள்ளுவன் போன்ற மாபெரும் புலவர்களின் தன்னம்பிக்கையின் படைப்புகளே சிலப்பதிகாரமும் திருக்குறளும். விஞ்ஞானிகளின் தன்னம்பிக்கையின் விளைவுகளே பல அரிய கண்டுபிடிப்புக்கள். உடல் ஊனமுற்ற எழுத்தாளர் ஹெலன் கெல்லர் நமக்கெல்லாம் ஒரு தன்னம்பிக்கையின் நட்சத்திரம். இவர் போன்ற சாதனையாளர்களைப்பற்றி வாசித்தறிவது எமது தன்னம்பிக்கைக்குத் துணைபுரியும் அல்லவா ?

”முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்”. தமிழ் மாணவர்களாகிய நாமும் தன்னம்பிக்கையுடன் எமது அடையாளமான தமிழ் மொழியைக் கற்று உலகிற்குப் பெருமை சேர்ப்போம்.

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி. சாந்தி ஜெயதேவன்